ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
|| ஸ்ரீ நக்ஷத்ர மாலிகா ||

ஸ்ரீ நம்மாழ்வார் விஷயமாக
ஸ்ரீ ஜீயர் நாயனார் அருளிச் செய்த -
ஸ்ரீ காஞ்சீ ஸ்வாமிகள் உரையுடன் –

தனியன்:
அஸ்மாஸூ வத்ஸலதயா க்ருபயா ச பூய:
ஸ்வேச்சாவதீர்ணமிவ ஸௌம்யவரம் முநீந்த்ரம் |
ஆசார்யபௌத்ரமபிராமவராபிதாநம்
அஸ்மத்குரும் பரமகாருணிகம் நமாமி ||
மாமுனிகளே வாத்ஸல்யம் க்ருபை அடியாக நித்ய விபூதியில் இருந்து மீண்டும் திருவவதரித்தாரோ என்று சங்கிக்க வேண்டும் படி – அவரோடு ஒக்க ஞான அனுஷ்டானங்கள் உடையவராய் - அவருடைய திருப் பேரனார் - பரம காருணிகராய் - பிராமவராசார்யர் என்று வட மொழியிலும்; ஜீயர் நாயனார் என்று தென் மொழியிலும் - வழங்கப் பெற்ற ஆசிரியரை வணங்குகின்றேன்.
————————————————
சப்த புஷ்ட்டி - அர்த்த புஷ்ட்டி -நிறைந்த - முத்ரா அலங்கார ரீதியில் ஸ்லோகம் தோறும் - 27-நக்ஷத்ரங்களையும் வரிசையாக அமைத்து – நக்ஷத்ர மாலிகா [மாலிகை] - அக்ஷர அந்தாதி - முன் நின்ற ஸ்லோக முடிந்த அக்ஷரமே அடுத்த ஸ்லோக ஆரம்ப அக்ஷரம்.

மேலும் முதலில் எட்டு எழுத்து பாதம் கொண்ட அனுஷ்டுப்பில் ஆரம்பித்து - 13-ஸ்லோகம் வரை க்ரமேண ஒவ்வொரு எழுத்தாக கூட்டிக் கொண்டு – நடுவில் உள்ள - 14-ஸ்லோகம் - 21 - எழுத்துக்கள் கொண்ட பாதம் - ஸ்ரக்தரா - வ்ருத்தத்தில் அமைத்து – மேலும் முதல் ஸ்லோகமும் - 27-ஸ்லோகமும் ஒரே வ்ருத்தம் / இரண்டாவதும் – 26-ஸ்லோகமும் ஒரே வ்ருத்தம் — இப்படியே - 13-ஸ்லோகமும் - 15-ஸ்லோகமும் ஒரே வ்ருத்தம் - மாலையாக சேர்ப்பதற்கு ஏற்ற படி.
——————————
Nakshatra-Malika .. by Jeeyar Nayanar (Grand Son of Vara Vara Muni in purvashrama)

Vyakyanam by Kanchi Prativadhi Bayankaram Annagarayacharyar Swami
…. English Translation by Mandayam Nayaka Ramanuja

Nakshathra Malika was authored by Jeeyar Nayanar, the grandson in purvashrama of Sri Manavala Mamuni. He was reputed by the name of “Acharya Poutra”. This Sthothram which was composed in prayerful praise of Nammalwar shines sans compare in the celestial sphere of Sanskrit stora granthas.

Endowed with a wealth of beauty of both words and meaning, this stotram can be likened only to itself. Each one of the slokam refers to a Star in the order of reckoning among the twenty seven stars and as such is titled as Nakshatsra Malika.

Besides, the last letter of the previous slokam is the beginning of the letter of the next slokam following the “Andhaadhi” style like Ramanuja Nootrandhadhi.

Another significant specialty of this storam is – just as garland weaver begins with a lean bunch of flowers and gradually increases the thickness of the flower bunch towards the centre and again thins out to the other end of the garland, so also this storam starts with a slokam of ‘Anushtup’ metre of eight letters per quarter and in the increasing order of the letter per slokam reaches the fourteenth slokam or Nadunayakam slokam having twenty one letters per quarter called the Sragdhara meter, which is literally also true as the fourteenth central slokam supports the whole garland, the corresponding slokas on either side of the central slokam have the same meter and the number of letters per quarter.

This type of poetic engineering has not been witnessed in any poetic endeavor. A behoving and extensive vyakyana for this ‘stotram’ was provided by Sri U.Ve. Kanchi P.B. Annangaracharya Swamy, to whom we are indebted for this brief translation and gist in the following lines:

Taniyan:

It is as though the great Manavala Mamuni reincarnated out of his own free will on this earth out of motherly affection and great mercy towards us, in the form of this grandson called AcharyaPoutra, wellknown as Abhiramavara in Sanskrit and as Jeeyar Nayanar in Tamil. I bow to that Acharya of unbounded mercy who is our Guru.

===

ஸ்ரீமாந் பராங்குஶமுநிர் ஜீயாத் யஜ்ஜ்ஞாநமுத்ரயா ।
நேந்த்ரியாஶ்வயுஜோ ந்ருணாம் நித்யம் விஷயவீதய: ॥ – 1

அஸ்விநி நக்ஷத்ரம் ஸூசகம் –

யாவர் ஒரு நம்மாழ்வாருடைய ஞான முத்திரையினால் விஷயாந்தர க்ரமங்கள் என்கிற குதிரைகளின் சேர்க்கையைப் பெறுகின்றன இல்லையோ – அப்படிப்பட்ட பெருமை வாய்ந்த ஸ்ரீ வைஷ்ணவஸ்ரீ மலிந்த நம்மாழ்வார் பல்லாண்டு வாழ்ந்திடுக – திரு ஞான மாத்திரையால் ஸம்சாரிகளையும் ஈடுபடுத்த வல்லரான ஆழ்வாருக்கு மங்களா சாசனம்.

===

1. May Victory be to Nammalvar owing whose Jnana Mudra (a special pose of the right hand fingers) or the pose of Knowledge, the roads in the form of sense objects are never trodden by the horses in the form of sense organs. People adoring the Jnana Mudra of Nammalwar never indulge in the objects of their senses. They beget good knowledge and devote themselves to the JnanaMudra of Nammalwar which can guides them out of the Samsara. This Slokam refers to Aswini star by the word Aswayuk

===

யதுரஸி பரணீயா ஸ்ரக்விகஸித வகுளாநத்தா ।
ஸ ஜயதி மஹிமா நாதோ முராரிபுபதஸக்தோ ந: ॥ – 2
– பரணீ நக்ஷத்ர ஸூசகம் –

யதுரஸி - யாவர் ஒருவர் நம்மாழ்வாருடைய திருமார்பிலே அணிந்து கொள்ளத் தக்கமாலை - மலர்ந்த மகிழம் பூக்களினால் கட்டப்பட்டதோ - எம்பெருமான் திருவடிகளில் ப்ரவணராய் - மகிமையே வடிவு எடுத்தவரான - ப்ரபந்ந ஜன கூடஸ்தராய் - ஸர்வ உத்காரஷராய் வாழ்கின்றார். மஹிமவான் - என்று சொல்லாமல் மஹிமா - என்றது - தத் குண சாரத்வாத் து தத் வ்யபதேச ப்ராஜ்ஞுவத் – ஸ்ரீ ப்ரம்மஸூத்ர கட்டளை படி.

===

Nammalwar is wearing on his chest, a fitting garland woven with Vakula flowers in full bloom. Nammalvar adheres steadfastly to the feet of Lord Murari. May victory be to that master of great significance, Nammalwar. This slokam refers to the second asterism Bharani.

===

நந்தா நந்தாங்க்ரி நலிநயுக்மே கர்த்தா லோகார்த்திகபலநாநாம் ।
பத்ராய த்ராவிடநிகமாநாம் த்ரஷ்டா புஷ்டாய வகுளப்ருத்ஸ்யாத் ॥ - 3

கார்த்திகா நக்ஷத்ரம் ஸூசகம் - பத்ராய த்ராவிட நிகமாநாம் த்ரஷ்டா புஷ்டாய – ஸ்யாத் - என்று அன்வயம் – எம்பெருமானுடைய திருவடித் தாமரை இணையில் வணங்குவதே தொழிலாக இருப்பவரும் – துயர் அறு சுடரடி தொழுது எழு என் மனனே – உலகோர்களின் ஆர்த்தியை எல்லாம் கபளீகரிப்பவரும் தமிழ் வேதமான திவ்ய பிரபந்தங்களை சாஷாத்கரித்தவரும் - நாதனுக்கு நாலாயிரம் உரைத்தான் வாழியே, மகிழ் மாலை மார்பினருமான நம்மாழ்வார் - நமக்கு மிகுந்த மங்களங்களை அளிப்பவராக ஆக வேணும்.

===

Nammalwar bows to the lotus feet of Anantha (Lord Vishnu). Nammalwar cuts as under and swallows up the woes of the devotees. Nammalwar is the seer and preceptor of the Tamil Vedas. May that Nammalwar bedecked with Vakula flower garland, bless (us) with abundant wellbeing. This slokam refers to the third star Krithika.

===

ஸ்யாதேவ ஸா மே பணிதிஶ் ஶடாரே: யயோதிதோச்சை: ஸரணிர்ஜநாநாம் ।
ஆரோஹிணீ நாப்யவரோஹிணீ ஹி வேதோதிதா து த்வயம்ப்யுபைதி ॥ - 4

ரோஹிணீ நக்ஷத்ரம் ஸூசகம்

யாதொரு நம்மாழ்வார் ஸ்ரீஸூக்தி - ப்ரபந்ந ஜனங்களுக்கு உஜ்ஜீவனமே அன்றி அவரோகணம் - கீழே தள்ளுவதாக இல்லையோ – வேதம் இரண்டுக்கும் அன்றோ - த்ரை குண்ய விஷயா வேதா - முமுக்ஷூ புபூக்ஷூ சாதாரணமாய் இருக்குமே - அது போல அல்லவே அருளிச் செயல்கள் - மோக்ஷ ஏக ஹேது அன்றோ – இவையே எனக்கு வாசோ விதேயமாக கடவது –

===

The great outpouring of Nammalwar, Thiruvaimozhi, paves the supreme path to Vaikuntha, which is like a ladder to devoted people to go to higher levels and never leads them to the nether worlds.

It is so much unlike the Vedas which prescribe paths which can lead to uplift as well as downfall. Refer Srimad Bhagavadh Geetha "Trygunya Vishaya Vedah..".

The Vedas prescribe protocols according to the candidates' desires of Dharma Artha and Kama. But this Tiruvaimozhi shows only one path and the path to Moksha. May such Tiruvaimozhi always be favourable to me. This slokam refers to Rohini star.

===

திலகமாஹ ந காசிதபி ஶ்ருதவ் த்ரிஜகதாம்ருகசீர்ஷஸமுத்திதா ।
ஸ்புடதரம் வகுளாபரணீயவாக் புருஷமாதிமஶேஷபதைரபி ॥ - 5

ம்ருகசீர்ஷம் ஸூசகம்

வேதம் தன்னில் தலையான வேதாந்தத்தில் உள்ளது அன்றிக்கே கர்ம காண்டம் - ஒரு வாக்கியமும் உலகுக்கு திலக பூதனான எம்பெருமானை சொல்லிற்று இல்லையே – நம்பெருமாள் அருளிச் செய்தவையோ எல்லா பதங்களினாலும் ஆதி புருஷனான எம்பெருமானையே மிக விளக்கமாக தெரிவிக்கும் – திருமாலவன் கவி யாது கற்றேன் - மாற்றங்கள் ஆய்ந்து கொண்டு மதுசூத பிரான் அடி மேல் / உரிய சொல்லால் இசை மாலைகள் ஏத்தி உள்ளப் பெற்றேர்க்கு – சகல பதங்களாலும் சாஷாத்தாகவும் ஸூஸ்பஷ்டமாகவும் எம்பெருமானையே ப்ரதிபாதிக்கை யாகிற ஏற்றம் பெற்றது - சீர்ஷம் - தலை - வேதாந்தத்தை சொன்னபடி – வேதைஸ் ச சர்வைரஹமேவ வேத்ய – ஸ்ரீகீதை / வேத்யோ வேதைஸ் ச ஸர்வைரஹமிதி பகவான் ஸ்வேந ச வ்யாஸகர்த்த - ஸ்ரீ பட்டர் ஸ்ரீஸூக்திகள் / வேதம் ஸ்புடம் / அருளிச் செயல்களோ ஸ்புட தரம்.

===

In the Vedas, none of the Hymns born of no human head (Apourusheya) and Upanishats have been able to demonstrate in clear certain terms that such and such is the real master of masters of the three worlds. Whereas every word created by the Vakula-adorned Nammalwar has pointed out in no uncertain terms at the original Godhead Sriman Narayana. This slokam refers to Mrigasheersha asterism.

===

பித்ராதிஸ்ஸகலவிதோ**S**பி பந்து வர்க்க: யஸ்யாஸீத்ஸரஸிஜவாஸிநீஸஹாய: ।
ஆவிஸ்ஸ்யுர்க்கநகருணாரஸாவஸேகை: ஆர்த்ரா மே வகுளப்ருத: கடாஷபாதா: ॥– 6

ஆர்த்ரா நக்ஷத்ரம் ஸூசிதம்

யாவரொர் நம்மாழ்வாருக்குத் தந்தை தாய் முதலான சகலவித பந்துவர்க்கமும் திருமகள் கொழுநனான எம்பெருமானே ஆயினானோ – சேலேய் கண்ணியரும் பெரும் செல்வமும் நன் மக்களும் மேலாத் தாய் தந்தையும் அவரே இனி யாவாரே - அந்த நம்மாழ்வாருடைய இடையறாத கருணா ரஜப் பெருக்கினால் குளிர்ந்த திருகி கண் நோக்கங்களானவை என் பொருட்டு ஆக வேணும் - ஆழ்வார் - அடியேனை

குளிரக் கடாக்ஷித்து அருள வேணும் என்றபடி - அருள் வெள்ளம் நம்மை ஆழ்த்த வேண்டுமே.

===

Nammalwar considered Sriman Narayana as his father, mother, brother and girls, children and wealth and all other relationships as stated in "Chindaiyaalum Sollaalum Seigaiyinaalum Thevapiraanaiye thandhai thaayendradaintha.." "Unnum soru…." Etc.
May such Vakula-bedecked Nammalwar's Kataksham (sideglance) drenched with the shower of the juice of *solid compassion* befall on me. This slokam refers to the asterism of Ardra.

===

தாமஶ்ரயாமி கருணாம் வகுளாபிராமம் யாஸௌ புநர்வஸூமதீவலயேவதீர்ணா ।
ப்ரஜ்ஞாத்ருஶோந்மிஷிதயா ப்ரதிதாநுபாவா ஜ்யோதி பரம் யதநிதம் ததிதம் சகார ॥–7

புனர்வஸூ நக்ஷத்ரம் ஸூசிதம்

நம்மாழ்வார் என்கிற கருணா மூர்த்தி - பூ மண்டத்தில் திருவவதரித்து - எங்கும் பிரசித்தி பெற்ற பெருமையையுடைய நன்றாக மலர்ந்த ஞானக் கண்களால் - ஒருவர் கண்ணுக்கும் எட்டாத பரஞ்சோதியை சாஷாத்காரித்தாரோ – என்றேனும் கட்கண்ணால் காணாத அவ்வுருவை நெஞ்சு என்னும் உட்கண்ணால் காணும் உணர்ந்து - பெரிய திருவந்தாதி – கண் காண நிற்கில் ஆணையிட்டு விலக்குவார்கள் என்று கண்ணுக்குத் தோற்றாதபடி நிற்கும் பரஞ்சோதியை கண்ணாரக் கண்டு களித்தவர் அன்றோ ஆழ்வார் – மகிழ் மாலையினால் அழகு பெற்ற அந்த கருணா மூர்த்தியை பணிகின்றேன் - அருள் கொண்டாடும் அடியவர் இன்புற அருளினான் அவ்வருமறையின் பொருள் - அருள் கொண்டு ஆயிரம் இந்த தமிழ் பாடினான் அருள் கண்டீர் இவ்வுலகினில் மிக்கதே – கருணாம் அப்ரமேயம்

===

I take refuge in that Grace (called Nammalvar) enchanting with Vakula flowers, which has reincarnated on this Globe. That Kindness of great significance (Nammalwar) with the full-bloomed Knowledge and Enlightenment bestowed by the Lord, did totally comprehend the Supreme Effulgence (Parama-Jyothi) which has described vaguely by the Vedas as Neti Neti; as a fruit on the palm and spread forth the qualities of The Lord through Tiruvaimozhi for the benefit of the sprawling devotees. This slokam refers to the Punarvasu star.

ரசிதவதி ரமாயா: நாயகஸ்யாங்கிரிபுஷ்யத்-
ப்ரணயரஸஸூதாப்திஸ்ரோதஸி ஸ்வைரேகாஹம் ।
ப்ரபவதி கலிகர்மப்ராவ்ருஷேண்யம்புவாஹே
வகுளதரமுநீந்த்ரே தாபவார்த்தா கதம் ந: ॥ – 8

புஷ்ய நக்ஷத்ரம் ஸூசகம்

திருமகள் கொழுநனான எம்பெருமானுடைய திருவடிகளில் வளர்கின்ற அன்பாகிற அமுத வெள்ளத்திலே யதேஷ்டமான அவகாஹநத்தை செய்து கலி ஸந்தாபத்தைப் போக்க வல்ல கார் முகிலாய் இரா நின்ற நம்மாழ்வார், நமக்கு இறைவராய் இருக்கும் போது நமக்கு தாபம் என்கிற பேச்சுக்கு இடம் உண்டோ — கண்டவாற்றால்

தனதே யுலகு என நின்றான் தன்னை வண் தமிழ் நூற்க நோற்றேன் அடியார்க்கு இன்ப மாரியே – கார்காலத்து எழும் கார் முகில் ஆழ்வார் ஆழியுள் புக்கு முகந்து கொடு ஆர்த்து ஏறும் முகில் –
ரமாயா நாயகஸ் யாங்கிரி புஷ்யத் – ப்ரணயரஸ ஸூதாப்தி ஸ்ரோதஸி ஸ்வைரேகாஹம் - ரசிதவதி - காதல் கடல் புரிய விளைவித்த காரமர் மேனி – காதல் கடலில் மிகப் பெரிதால் – திருமால் விஷயமான காதல் கடலில் அவஹாஹிக்கப் பெற்றது இந்த காளமேகம் – உப்பு கடலில் இல்லாமல் அமுத கடலில் படிந்த மேகம் என்பதால் - ஸூதாப்தி ஸ்ரோதசி - பக்தி ஸ்ருங்கார வ்ருத்தயா பரிணமதி - நாயகி சமாதியாலே அனுபவிக்கவும் அமைந்ததால் -ப் ரணயரச ஸூதாப்தி - என்கிறார்; கலி ஸந்தாபத்தை போக்க வல்ல ஆழ்வார் ஆகிற காள மேகம் - என்பதால் கலி கர்மா ப்ராவ்ருஷேண்ய அம்புவாஹே என்கிறார் – வர்ஷா காலத்தில் தோன்றுமது – ப்ராவ்ருஷேண்யம் எனப்படுமே – இப்படிப்பட்ட ஆழ்வார் நிழலிலே வார்த்தைக்கும் நமக்கு ஒரு நாளும் தாபங்கள் இல்லை என்றதாயிற்று.
===
Having wantonly plunged to the heart's content in the torrent of nectar from the ambrosial ocean of waxing cordial love for the lotus feet of the Lord of Shree, this dark rainbearing cloud, capable of quenching the scorching heat of Kali (yuga), in the form of the king of sages, Nammalwar, wearing Vakula flowers, has become our master and will provide us with shade, and therefore how can there be any mention of our woes (samsara tapa). This slokam refers to the Pushya Star.
===

நமஜ்ஜநஸ்ய சித்தபித்தி பக்திசித்ரதூலிகா-
பவாஹி வீர்ய பஞ்ஜநே நரேந்த்ர மந்த்ரயந்த்ரணா ।
ப்ரபந்நலோககைரவப்ரஸந்ந்சாருசந்திரிகா-
ஶடாரிஹஸ்தமுத்ரிகா ஹடாத்துநோது மே தம ॥ – 9

பவாஹி - அஹி பதத்தினால் ஆஸ்லேஷா நக்ஷத்ரம் ஸூசிதம் -
ஆஸ்லேஷா நக்ஷத்ரம் சார்பாக தேவதா - வேத வாக்கியம் – தேவதையை சொல்லும் முகத்தால் நக்ஷத்ரத்தை ஸூசிபிக்கிற புடையும் உண்டு - மேலே அனுராதா நக்ஷத்ரத்தையும்-17-ஸ்லோகத்தில் – அனுராதா நக்ஷத்ரம் மித்ரோ தேவதா - என்றும் வரும்.
ஆழ்வாருடைய ஹஸ்த முத்திரையை வர்ணிக்கிறார் - தம்மை வணங்கும் அடியார்களின் ஹ்ருதயமாகிற சுவரில் - பக்தியாகிற சித்திரத்தை எழுதும் கருவி – பக்தியை கூட்ட வல்லதாய் இருக்குமே – ஆழ்வார் ஸம்சார போகி சந்தஷ்ட ஜீவ ஜீவாது - ஆகையால் - சம்சாரஸர்ப்ப வீர்யம் தணிக்கும் விஷ வைத்யனுடைய மந்த்ர ப்ரயோக சிட்டிகை போன்றதாயும் - ஸம்சார ஸ்ப்ருஹைதையை அறுக்க வல்லதாய் இருக்குமே - ஹடாத் - என்பதால் தமஸ்ஸூ பூக்க அரிதாய் இருக்கும் என்றதாயிற்று – பிரபன்ன ஜனங்கள் ஆகிற ஆம்பல் மலர்களை விகசிப்பிக்க வல்ல அழகிய நிலா போன்றதாயும் - பிரபன்னர்களை பரவசராக்க வல்லதாயும் இருக்குமே.
===

The pose of the right hand of Sathari, Nammalwar, is like the art brush that would draw the picture of Bhakthi on the wall that is the heart of the devotees taking refuge in him; or it is like coaxing the devotees into uttering the king of Mantras (Ashtakshara) in order to neutralize the venom of the Samsara Sarpa (serpent of the cycles of births and deaths); or it is like the cool sweet moonlight for the blooming of the blue lotus in the form of the world of refugees. May that pose of the right hand of Nammalwar expeditiously expel my inner darkness. In this sloka the word 'Ahi' meaning a snake is used to refer to the Aslesha star, because the serpent is the devata of Aslesha star, according to the Vedas.
===

மநஸ்ஸ்படிகதர்ப்பணப்ரதிபலத்பரப்ரஹ்மண:
ப்ரதர்ஶநமிவாசரந் ப்ரதித போத முத்ராங்கித: |
ஸதாமபயஶம்ஸிதா பவபயாபிதப்தாத்மநாம்
அகாநி ஶமயேத நச: ஶடரி போரவாம: கர: || - 10

மகா நக்ஷத்ரம் ஸூசிதம்
கவர்க்க சதுர்த்தமாகவே வேதத்தில் இந்த நக்ஷத்ரம் உள்ளதே – கீழே ஹஸ்த முத்திரை வர்ணனை இதில் முத்ராஞ்சிதமான ஸ்ரீ ஹஸ்தத்தை வர்ணிக்கிறார் – ஹ்ருதயத்துக்கு நேராக இருப்பதால் - தமது திரு உள்ளம் ஆகிற ஸ்படிக கண்ணாடியிலே பிரதிபலித்து தோன்றுகிற பரப்ரஹ்மத்தை காட்டா நின்றது போல் இருப்பதும் - புகழ் பெற்ற ஞான முத்திரையினால் அடையாளம் பெற்றதும், ஸம்சார பீதியினால் தப்பிக்கும் நெஞ்சினரான சாத்விகர்களுக்கு அபயம் அளிக்க வல்லதுமான நம்மாழ்வாருடைய வலது திருக் கையானது நம்முடைய பாவங்களைத் தொலைக்கக் கடவது – பிரதித்த போத முத்ராங்கித - என்று விசேஷணம் - ஞான முத்ரையததே - அது எங்ஙனம் - ஸதாம் அபாய ஶம்ஸிதா - என்னும் அபய முத்திரையை காட்டும் என்னில் - ஞான முத்திரையின் சன்னிவேசம் தானே அபய முத்திரை போலவும் காணக் கூடியதாகையாலே அப்படி சொல்லக் குறையில்லை.
===
The famous Bodha mudra or jnana mudra or the pose of enlightenment of the right hand of Nammalwar, the enemy of Satha (a wind that seizes all beings at birth), that appears as if picking out the reflection of the Supreme. Being that is shining on the crystal mirror of his heart removes the fears of the devotees who are panicking with the fear of Samsara. May that right hand of Nammalwar tranquilise our load of sins. This sloka refers to the star Magha or Regulus.

ரமயது ஶடஶத்ருரத்யுந்நதாசாரயுக்தைர்ஜநை:
அவநதபதபத்மயுக்மோநுகம்பாம்ருதாம்போநிதி: |
பஹுவிதக்ருதபூர்வபல்குந்யகாசாரசிந்தாகுலம்-
ஹ்ருதயமஸத்ருஶாத்மபாதாரவிந்தாநுஷங்காந்மம || - 11

பூர்வ பல்குனி நக்ஷத்ரம் ஸூசகம்
மிகச் சிறந்த அனுஷ்டானம் உள்ள சாத்விக ஜனங்களால் வாங்கப் பட்ட திருவடித் தாமரையிணையை யுடையவரும் — அறு தொழில் அந்தணர் வணங்கும் தன்மையன் - மேவினேன் அவன் பொன்னடி மெய்ம்மையே - ஸ்ரீ மதுரகவிகள் போல்வார்

ஆழ்வார் திருவடிவாரத்தில் படுகாடு கிடப்பரே கருணை யாகிற அமுதக் கடலாய் இருப்பவருமான நம்மாழ்வார் - அருள் கண்டீர் இவ்வுலகினில் மிக்கதே - முற்பிறவிகளில் செய்த பல வகைப்பட்ட இழி தொழில்களைப் பற்றிக் கவலையினால் கலங்கி இருக்கின்ற என் மனத்தை ஒப்பற்ற தமது திருவடித் தாமரைகளின் சம்பந்தத்தினால் கலக்கம் நீங்கிக் களிக்கச் செய்திடுக - பல்கு - அசாரம் / ந்யகாசார - நீசமான நடத்தை - ந்யக் நீச கர்வ ஹ்ரஸ்வாஸ் ஸ்யு – அமர கோசம் அஸத்ருச - விசேஷணம் பாதாரவிந்தத்திலும் - அநுஷங்கத்திலும் அன்வயம் - கருத்து ஒன்றே

===

Persons of high levels of practical orthodoxy, bow their heads down to the lotus like pair of feet of Nammalwar who is an ocean of nectar-like mercy. My heart is disturbed with the earlier commissions of many types of mean sins and violations. May Nammalwar give me consolation and contentment by bestowing a sense of belonging to his incomparable pair of lotus feet. This sloka refers to the Purva Phalguni star.

===

மக்நம் மாநஸ மா ஸ்ம பூஸ்ஸடரிபோரவ்யாஜஸித்தா தயா
நௌகா காசந நாவிகோSபி ஸ புந: ஸந்தாரகக்ராமணீ: |
ஏதேநோத்தரபல்குநீரஸபரிக்லிஷ்டோபபோகோர்மிகம்
து:காவர்த்ததுரந்தபாரகமநம் ஸம்ஸார வாராகரம் || - 12

உத்தர பல்குநீ – நக்ஷத்ரம் ஸூசகம்

கீழ் சிந்த்தாகுலம் மம ஹ்ருதயம் - என்றவர் தாமே தம் ஹ்ருதயத்திற்கு அபயம் அளிக்கிறார் – வாராய் மட நெஞ்சே - ஸம்சார சாகரத்தில் ஆழ்ந்து வருந்திக் கிடவாதே – நல் விரகு சொல்கிறேன் - நம்மாழ்வாருடைய நிர்ஹேதுகமானதொரு திருவருளானது பிறவிக்கு கடலுக்குப் படகாகும் – அக்கறை சேர்ப்பவர்கள் தலைவராகி அவ்வோடத்தை ஓட்டுபவரும் அவ்வாழ்வாரே ஆவார் – அல்பங்களாய் சுவை அற்றவைகளாய் பலவகை கிலேசங்கள் பொருந்தியவையாய் இருக்கிற விஷய போகங்கள் ஆகிற அலைகளை யுடையதும் பலவகை துன்பங்கள் ஆகிற சுழிகளை யுடையதும் கரை என்ற முடியாததுமான பிறவி என்னும் கடலை இவ்வாழ்வார் ஆகிய நாவிகனைக் கொண்டு கடந்து செல்வாயாக – ஆழ்வார் திருவடிகளை பற்றினவர்களுக்கு ஸம்சார சாகரம் முழம் தாள் அளவாகும் என்று தெரிவித்தபடி.

===

Oh my mind, please do not sink with depression! The effortless casual mercy of Nammalwar is a beautifulship and Nammalwar is a leader of Navigators who can carry us across the Bhavasagara. With the help of that ship and that sailor, you can cross this samsara ocean which has trivial, insipid and troublesome indulgences for its waves and which with its whirlpools of sorrows makes crossing to the other shore next to impossible. This sloka refers to the Uttara Phalguni star.

===

ரத்நதீபிகாயமாந ஹஸ்தமுத்ரிகாக்ருதத்ரயீகிரீந்த்ர-
கந்தராந்தராலகாடரூட ரூடிமந்நிதாநஸூசநேந ।
த்ராவிடாகமோபகீதிமூலஸேகஶீதவீதநித்ரபத்ரதிவ்ய-
திந்த்ரிணீஸமீபகேந நாதவாநஹம் பராங்குஶேந ॥ –13

ஹஸ்த நக்ஷத்ரம் ஸூசகம்

மணி விளக்குப் போன்ற ஸ்ரீ ஹஸ்த முத்திரையினால் வேதங்கள் ஆகிற மலை முழஞ்சுகளின் உள்ளே திடமாக அழுந்தி கிடக்கின்ற - பேர்க்கவும் பேராத நிதியான பரம் பொருளை ஸூஸிப்பிக்கின்றவரும் - ஆழ்வார் திருக் கைத்தல முத்திரை ரத்ந தீபம் போன்றது – வேர்ப் பற்றில் திருவாய்மொழியின் இசை பாடுவதாகிய தீர்த்த அபிஷேகத்தினால் – தீர்த்தங்கள் ஆயிரம் – குளிர்ந்து உறங்காத இலைகளை யுடையதான திருப்புளி அடியிலே வீற்று இருப்பவருமான நம்மாழ்வாரையே அடியேன் ஸ்வாமியாக யுடையேன் – உறங்காப் புளி - ஒரு போதும் இல்லை மூடுவது இல்லை - என்பதால் - வீத நித்ர பத்ர - லோக யாத்திரை ஒன்றும் அறியாமல் திருப்புளி ஆழ்வார் அடியிலே திருவவதரித்த உடனே போந்து - வீடு பெரும் அளவும் வீற்று இருந்தார்.

===

The pose of Nammalwar's right hand is like a Jewel torch light, which is indicating at the deep-dwelling Primordial Being, in the deep interiors of the dark caves of the kind of mountains that the Vedas are. By virtue of Nammalwar sitting under the divine Tamarind tree and reciting the Tamil Vedas, the roots of the tree get sprinkled with cool nectar and the leaves of the tamarind tree are not affected by sleep, and are always awake unlike other tamarind trees. I am fortunate to have such Nammalwar, Parankusha as my Master and Guardian. This sloka refers to the asterism of Hasta.

நத்யா ந த்யாககாரீ க்ஷணமபி சிதசித்த்ராயகமேய காமே
சந்தஶ்சந்தஸ்வரூபே மஹஸி கமலயா பாஸமாநே**ऽஸ**மாநே ।
ஶ்ரேய: ஶ்ரேயஸ் விஸங்கை: பரிசயஸூரபி: கைஸராணாம் ஸராணாம்
பாதாத்பாதாத்பவாப்தெள ஶடரிபுரிஹ நோ வீக்ஷணேந ஷணேந ॥ - 14

சித்ரா நக்ஷத்ரம் ஸூசகம் - நடுநாயக நக்ஷத்ரம்:

அதிக அக்ஷர வ்ருத்தத்தில் – 21-அக்ஷரம் ஒவ்வொரு பாதத்திலும் அமைக்கப்பட்ட ஸ்லோகம் –

சேதன அசேதனங்களை எல்லாம் ரஷிக்க வல்ல அப்ரமேயமான சங்கல்பத்தை யுடையதும் - வேதங்களின் தாத்பர்யமே வடிவு எடுத்ததும் - பிராட்டியோடே கூடி விளங்கா நிற்பதுமான - ஒப்பற்ற எம்பெருமான் என்னும் பரஞ்சோதி - இடம் எப்பொழுதும் இறைப் பொழுதும் நமஸ்காரத்தை விடாமல் இருப்பவரும் நத்யாககாரீ- விடாதவர் - எத்தை என்றால் - நத்யா-நமஸ்காரத்தை – குழுமித் தேவர் குழாங்கள் கை தொழச் சோதி வெள்ளத்தின் உள்ளே எழுவதொரு - அப்ரமேயம் ஹி தத் தேஜ - எம்பெருமானை மஹஸ் - என்று மறைத்து அருளிச் செய்து இருப்பது

காண்க
ச்ரேயஸைப் பெற்றுள்ள சாத்விகர்களின் திரள்களினால் ஆச்ரயிக்கத் தகுந்தவரும் - ஸ்ரீ மதுரகவிகள் - ஸ்ரீமன் நாதமுனிகள் போல்வார் பணிய நின்றவர் – மகிழம் பூ மாலைகள் அணிந்து கொண்டு இருப்பதனால் - பரிமள பிரசுரருமான நம்மாழ்வார் ஒரு நொடிப் பொழுது கடாக்ஷித்து அருளி இவ்வுலகில் உள்ள நம்மைப் பிறவிக்கு கடலில் விழுந்து போவதில் நின்றும் காத்து அருளக் கடவர்
===
Nammalwar does not even for a moment, stop bowing to that Effulgence. Which has made a great resolve to redeem all living and nonliving beings, Which is the gist of the Vedas and Which shines in union with Mahalakshmi. Nammalwar is a befitting refuge for all great personalities like Madhurakavi and Nathamuni. Nammalwar is fragrant with the constant contact with the garlands of Vakula flowers. May that Nammalwar save us from falling into the ocean of samsara by just a momentary glance at us. The star Chitra or Spica is indicated in this sloka.
===

ந ப்ரபத்திவர்த்மந: ப்ரவர்த்தநாபதாநவாஸநாநுஸாரி-
நவ்யபேதஸர்வதாஜலாயாந்வயம் கதம் ஸமம் ஸரோஜம் ।
ஸ்வாதிகாமியோகிப்ருந்தசித்தபத்மபத்தஸௌஹ்ருதாநுரக்த-
ரூபயோஸ் ஶடாரிபாதயோர்யுகேந ஸந்நதார்த்திபஞ்ஜநேந ॥ - 15

ஸ்வாதி நக்ஷத்ரம் ஸூசகம்
இது முதல் - 26-ஸ்லோகம் அளவும் ஆழ்வாருடைய-திருவடி தொடக்கி திருமுடி ஈறாக — திவ்ய அவயவ ஸுந்தர்ய வர்ணனம் – அடி பணிந்தாருடைய ஆர்த்தியை எல்லாம் அகற்றுமதான - தம்மை மிகவும் விரும்புகின்ற யோகி சமூகத்தின் ஹ்ருதய புண்டரீகத்தில் அன்புடையவைகளாய் - அத ஏவ – அநு ராக பரிதமான திரு உள்ளத்தில் அன்புடன் உறைந்து - மிகச் சிவந்து இருக்கின்ற நம்மாழ்வார் திருவடிகளின் இணையோடு பிரபத்தி மார்க்கத்தை ப்ரவர்த்திப்பித்தல் ஆகிற சரிதையின் வாசனையையும் அறியாததும் ஜலாசய சம்பந்தத்தை ஒரு காலும் விடாமல் எப்போதும் ஜடாசய சம்பந்தத்தையே கொண்டு இருப்பதுமான தாமரைப் பூவானது எப்படி ஒப்புமை பெற்றதாகும் – லடயோரபேத–லகாரத்துக்கும் டகாரத்துக்கும் பேதம் இல்லை – தாமரை பக்ஷம் லகாரம் - ஜலம் - நீர் நிலைக்கு வாசகம் - ஆழ்வார் பக்ஷத்தில் மந்த புத்தி நீசர் - அன்வயம் அற்றது என்றபடி ஆர்த்தியை தொலைக்கும் திருவடிகளுக்கு தாமரை உவமை சொல்ல யுரியது அல்லவே.
===
[*From here, we see padadikeshanta varnanam*].

How can a red lotus be comparable to the divine feet of Nammalwar? A lotus does not have even the smell of the history of exploits of enjoining people on the path of Prapatti or surrender; neither does a lotus ever stay without connection with a water reservoir. Whereas Nammalwar's feet are strongly affectionate with the lotus-like hearts of Yogis who are fanatically in love with Nammalwar's feet and also pulverize the woes of people who are

prostrating, to Nammalwar's feet. They also put people on the right path of prapatti and never even for a moment have association with people of dull minds and mean intentions. Puns are used here in "anurakta' and in jalashaya where 'la' is in the case of lotus and 'da' is used instead of 'la' as jadashaya {by the grammatical rule of 'ladayorabhedah'} in the case of Nammalwar's feet for interpretation. In this sloka the star of Swathi is referred to.
===

நத்வா யாம் குஸூமாயுதேஷூதிருசிவ்யாகாதமாதந்வதீ
ஶேமுஷ்யா மஹதாமஹாயி தருணீ ஜங்காஸூ ஜங்காலதா ।
விஸ்தீர்ணச்சவிஶாகயா ஶடரிபோர்வ்ருத்தாநுபூர்வீஜுஷா-
ஜங்கா கல்பதருஶ்ரியா ஸூரபிதம் சிந்தாவநம் மாமகம் ॥ – 16

விசாகா நக்ஷத்ரம் ஸூசகம்
ஆழ்வாருடைய திருக் கணைக்கால் அழகில் ஈடுபட்டு பேசுகிறார் – ஜங்கை ஆகிற கற்பக வருஷம் அழகினால் - என்னுடை சிந்தை ஆகிற பொழில் நறுமணம் மிக்கு - நறும் பொழில் ஆயிற்று – மன்மதனுடைய அம்பறாத் தூணியின் அழகையும் வென்று விளங்கும் – இதில் கண் வைக்கும் மஹான்கள் - விஷயாந்தரங்களில் சங்கத்தை நெஞ்சாலும் நினையாதவர்கள் ஆவார் வேகமாக ஓடும் தன்மை ஜங்காலதா - அது விடப்பட்டது - ஆழ்வாருடைய ஜங்கைகளை சேவித்த மகான்களின் சேமுஷி - மதி – அவற்றை விட்டு இதிலே ஆழம் கால் பட்டு இருக்கும் என்றபடி – அப்படிப்பட்ட பெருமை வாய்ந்ததும் - பரந்த தேஜஸ் புஞ்சங்கள் ஆகிற சாகைகளை யுடையதும் - காந்தி பரம்பரைகள் - சாகையாக உருவகம் – உருண்டை வடிவு நன்கு அமைந்து இருக்கப் பெற்றதும் – வ்ருத்த அநு பூர்வீ விசிஷ்டம் - நல்ல நடத்தை யுடையது என்றபடி.
===
Nammalwar's aesthetically conical forelegs overshadow the beauty of the quiver of Manmatha, the flower-arrowed. After seeing and bowing down to them, which have their lustre spread in all directions and look like branches of celestial tree, even the minds of great people stopped running after the attractive forelegs of young belles. The fragrance from the heavenly tree in the form of Nammalwar's forelegs, has wafted throughout the forest of my contemplation [in my mind]. This slokam refers to the Visakha star.
===

கநதவயவலோலஶோபாபிதாநாபக்ராஸ்ரோதஸ:
ஸமுதிதகுருபுத்புதாகாரஸந்தேஹஸந்தாயிநோ: ।
ககுததிகதமித்ரபாவம் ஸ்வபாவாத்யுகம் ஜாநுநோ:
மம ஹ்ருதி ஶடைவைரிநாம்நோ முநீந்த்ரஸ்ய ஸந்தீவ்யது ॥ - 17

மித்ர பாதத்தால் அநுராதா நக்ஷத்ரம் ஸூசகம் -
அநுராதா நக்ஷத்ரம் மித்ரோ தேவதா – கீழே ஆஸ்லேஷா நக்ஷத்ரம் - 9-ஸ்லோகம் போலே இங்கும் –

அழகு மிக்க திவ்ய அவயவங்கள் தள தள என்று சோபையாகிற நிர்மல நதியின் வெள்ளத்தில் நின்றுண்டான பெரிய நீர்க் குமிழியின் வடிவு தானோ இவை - என்று சந்தேகிக்கும் படியான ஆழ்வாரது திரு முழம் தாள்களின் இயற்கையாகவே எருதுகளின் முசுப்போடு தோழமை பெற்று இருக்கும் இணையானது என் உள்ளத்திலே விளங்க வேணும்.

===

The lustrous white brilliant efflux from the limbs of Nammalwar is flowing down like a waterfall producing big bubbles, as though, in the form of the pair of divine knees of Nammalwar. The knees also by nature have attained similarity to the lumps of bulls. May such knees of Nammalwar brighten my heart. In this slokam, the word Mitra is used to denote the Anuradha star since the Veda says 'Anuradha nakashatram Mitro devatha'.

===

துலாஸரணிஸீமநி ப்ரதிதரூபயா ஹஸ்திநாம்
கரேண கரபேண வா கதலிகாப்ரகாண்டேந வா |
ததோபரி ச பஶ்யதாம் நயந பந்த நஜ்யேஷ்டயா
சமத்க்ருதிமதீ மதிஶ்ஶடரிபூருலக்ஷ்ம்யா மம || –18

ஜ்யேஷ்டா நக்ஷத்ரம் ஸூசகம் –

திருத்துடைகள் - அடி பருத்து நுனி சிறுத்து மத மத என்று மாம்சங்களாய் விளங்கும் திருத் துடை அழகில் ஈடுபட்டு அருளிச் செய்கிறார். யானைகளின் துதிக்கையோடும் - கரபம் என்னும் புறம் கையினோடும் – மணிக்கட்டு தொடங்கி சுண்டு விரல் அளவும் உள்ள புறம்பு பாகம் – சிறந்த வாழைத் தண்டினோடும் ஒப்பிடுகையில் பரம காஷ்டையிலே - புகழ் பெற்ற யுருவத்தை யுடையதும் - அதற்கு மேலே பார்ப்பவர்களின் கண்களைப் பிணிப்புண்ணப் பண்ணுமத்தில் தலைமை பெற்றதுமான திருத்துடைகளின் அழகினால் என்னெஞ்சகம் அழகு பொலியப் பெற்றது – வீற்று இருந்த அழகில் திருத்துடைகளின் கீழ் அழகு சேவிக்கப் போகாதே - மேல் அழகு சேவித்த மாத்திரத்திலே கண்களை பிணிப்புண்ணச் செய்யுமே.

===

The divine thighs of Nammalwar are so handsome and beautiful that they have joined the chain of comparisons to the trucks of elephants, or the portion of the palm between the thumb and forefinger, or the stems of giant plantain trees. Further the things are greatest by their power of capturing the eye of the observers. My mind is wonderstruck by the marvelousness of Shathari's divine thighs. In this slokam the asterism of Jyeshtha or Anatares is referred to.

===

மஹ: ப்ரரோஹமஞ்ஜரீமநோஜ்ஞரத்நமேகலா-
கலாப புஷ்பிதா கடீதடீபடீ ஶடத்விஷ: |
உரஸ்ஸ்ரவத் ப்ரபாஜரீநிபாதநிம்நநாபிகா-
Sவடத்தபேநமண்டலீவிதர்க்கமூலமேவ ந: || – 19

மூல நக்ஷத்ரம் ஸூசகம்
நம்மாழ்வாருடைய தேஜஸ் புஞ்ஜ மஞ்ஜரிகளாலே மனோஹரமான மணி மேகலா-கலாபம் பூத்து இருக்கப் பெற்ற திருவரைப் பீதகவாடையானது அதில் ஈடுபாடுள்ள நமக்கு திருமார்பில் நின்றும் பெருகுகின்ற காந்தி வெள்ளம் விழுந்து பள்ளமான திருநாபித் தலத்தில் உண்டான நுரையின் திரளோ என்கிற சங்கையைத் தோற்றுவிக்கிறது - விதர்க்கம் - உத்ப்ரேக்ஷை – பீதகவாடை மெல்லியதாகவும் வெண்ணிறமாகவும் இருப்பதால் நுரையாக உத்ப்ரேஷித்தல் பொருந்தும்.

===

The brilliant white cloth around the waist of Nammalwar is the next target of adoration. The sparkling bejeweled girdle appears like the flower artwork over the brilliant foamy waist cloth. This in turn triggers speculation in the minds of devoted onlookers, whether it is the sheet of foam crated owing to the avalanche of effulgence from the area of the chest failing into and ceating the deep navel of Nammalvar. The star referred to here is Moola.

===

நயநஸூபகநாபீமுத்திஶந்தீ ஶடாரே:
ஸர இதி பரிபாஷா டௌகதே ஸார்த்தகத்வம் |
ஸததமிதரதா ந: ஸம்ஹதா நேத்ரமீநா:
கதமிஹ விஹரேயு: கௌதுகோத்ரேக யுக்தா: || – 20

பூர்வாஷாடா நக்ஷத்ரம் ஸூசகம்
கண்ணுக்கு அழகிய திருநாபீ பற்றி உண்டான இது ஒரு குளம் என்கிற ப்ரவாதம் உண்மைத் தன்மையை அடைகின்றது – ஆழ்ந்து இருப்பதால் திருநாபியை தடாகம் என்பது கவி மரபு - அப்படி இல்லாவிடின் நம்முடைய கண்கள் ஆகிற மீன்கள் திரண்டு கொண்டு மிக்க குதூஹலத்தோடே கூடினவைகளாய் இந்த திருநாபியில் எப்படி விளையாடும் !

===

The interpretation regarding the navel of Nammalwar that it is a pond, usually done by poets in comparing the navel to a pond, is very apt in the case of Nammalvar. That appears so true as otherwise, how else would we explain the fact that all the shoal of fish in the form of the devoted spectators’ eyes, always dwell and enjoy swimming in the navel with curiosity and excitation. In this slokam, Purvashadha asterism is mentioned.

===

தாம் மத்யதேஶஸூஷமாமவலோகயாமி
ரோமாவலித்ரிவலிகாருசிராம் ஶடாரே: ।
ரேகாத்தரா யதுபமாமதிகாபிலாஷா
டௌகேத வா யதி வா ந வடபத்ரஶோபா ॥ – 21

உத்ராஷாடா நக்ஷத்ரம் ஸூசகம்:
ரேகைகளினால் சிறந்து விளங்குகின்ற ஆலிலையின் அழகானது மிகுந்த விருப்பம் யுடையதாய் யாதொரு இடை அழகோடு ஒப்புமையைப் பெறுமோ அல்லது பெறாதோ - அப்படிப்பட்ட ஆழ்வாருடைய ரோமாவளியினாலும் மும்மடிப்பினாலும் அழகு பொழிந்த இடையின் அழகை இடைவிடாது சேவிக்கின்றேன்.

===

I observe with appreciative adoration, the aesthetic beauty of the region of abdomen of Nammalwar, which is pleasing to the eye with the slender hairline and the three wrinkles. The beauty of the leaf of Peepul tree which possesses thin lines and which is over-ambitious to contend with the abdominal beauty of Nammalwar, may or may not afterall not succeed to stand comparison. In this sloka mention is made of the star Uttarashadha.

===

பாஸா ந வ்யதிபிதுரீபவந்தி ப்ருங்கா:
ஹாரஸ்தாதுரஸி ஹரிந் மணேஸ்ஶடாரே: ।
ஆரூடா வகுளமயீம் ஸ்ரஜம் ஸூகந்திம்
ஶப்தேந ஸ்ரவணஸூகேந யாந்தி பேதம் ॥ – 22

ஸ்ரவண நஷ்ரத்ரம் ஸூசகம்
ஆழ்வாருடைய மகிழம் பூக்களினால் பரிமள பிரசுரமான மாலையில் ஏறியுள்ள வண்டுகள் தமது ஒளியினால் திருமார்பில் ஹாரத்தில் இருக்கும் மரகத பச்சையைக் காட்டிலும் வேற்றுமை பெறுகின்றன அல்ல - ஆனாலும் செவிக்கு இனிய இசையினால் வண்டுகள் எண்ணலாம் படி வேற்றுமை எய்துகின்றன –
வண்டின் அழகையும் திருமார்பில் அணிந்து இருக்கும் - ஹரின் மணி - மரகத பச்சை அழகையும் சேர்த்து அனுபவிக்கிறார் - இரண்டுமே மனோஹரமாய் இருக்குமே.

===

Nammalwar is adorned with two garlands on the chest. One is the long necklace made of emeralds and the other is the fragrant garland woven with the sweet honied Vakula flowers. The bees that hover near the emeralds in search of honey are indistinguishable from the emeralds, because of identical green lustre. But when they land on the fragrant Vakula flowers, they get intoxicated with the honey and begin to hum sweet notes to the ears and thus become distinguished from the emeralds by the sweet hum. The emeralds look like the bees and the bees look like the emeralds in the garland. This sloka mentions the star Sravana.

===

தமவத: குருதே மதநோத்ததாந்
ஸூகடயத்யபுதாந் புதநிஷ்டயா |
ப்ரதித முத்ரமநித்ரஸரோருஹ-
ப்ரணயி பாணிதலம் ஶடஜிந்முநே: || – 23

தனிஷ்டா - அவிட்டம் நக்ஷத்ரம் ஸூசகம்

விளக்கமுற்ற திருமுத்திரையை யுடையதும் ஒரு காலும் மூடிக் கொள்ளுதல் இல்லாத தாமரை மலரோடு தோழமை கொண்டதுமான திருக்கைத்தலமானது காம வெறி கொண்டவர்களை அடக்கமுற்றவர்களாக செய்கின்றது - விவேகமற்றவர்களை விவேக உறுதியோடு நன்கு கூட்டுகின்றது – ஞான முத்திரையை சேவித்து - அடக்கம் உண்டாக்கி - விவேகத்தையும் உண்டாக்கி - சம தமாதி குண சம்பத்தைப் பெறுவோம் என்பது பரம தாத்பர்யம்.

===

The right hand of Nammalwar sage is held with the famous Jnana mudra or the knowledge pose and the palm resembles a fully bloomed lotus. It turns intoxicated people into ones with a great restraint and disciplines them. It infuses politeness in insolent people. It turns indiscriminate dullards into great scholarly people. In this slokam, the asterism of Dhanishtha is referred to.

===

நேஹ ஸம்ஸரணரோகஸம்ஹ்ருதி: ஜாயதே ஶதபிஷக்சிகித்ஸயா |
அந்தரேண ஶடவைரிகந்தராலம்பமாநவகுளஸ்ரஜாம் ரஜ: || 24

சதபிக்ஷக் நக்ஷத்ரம் ஸூசகம்

